[1970 பிப்ரவரி 23

பொன்னமராவதியை நகரசபையாக மாற்றியமைத்தல்

* 146 வினா. புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருமயம் தொகுதியிலுள்ள பொன்னமராவதி பேரூராட்சியை நகரசபையாக மாற்றியமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: இல்லை.

புலவர் பொ. பொன்னம்பலம்: பேரவைத் தலைவர் அவர்களே, இனிமேலாவது பொன்னமராவதியை நகரசபையாக மாற்றியமைக்க அரசு ஆய்வு செய்யுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, இது குறித்து திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர், ஊராட்சி நகராட்சி இயக்குநர் ஆகியவர்களைக் கலந்து பேசியதில் அப்படி ஒரு செயற்குறிப்பு இல்லையென்று தகவல் கிடைத்தது. மேலும் 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள், ஒரு லட்சம் ரூபாய் வருமானம் வந்து, அதுவும் இரண்டு மூன்று ஆண்டுகளாக நிலையாக வந்தால்தான் அப்பகுதிகளைப் பரிசிலித்து அரசாங்கம் நகராட்சியாக உயர்த்துகிறது. அந்த அடிப்படையில் பொன்னமராவதி வருமானால், உரிய நேரத்தில் பரிசீலனை செய்து அரசு அதை நகராட்சியாக உயர்த்தும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் இப்படிப்பட்ட நகரசபையாக மாற்றப்பட்டுள்ள பேரூராட்சி இருக்கிறதா? இன்னும் எத்தனை மாற்றப்பட இருக்கிறது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஏற்கெனவே 6 பேரூராட்சிகள் நகராட்சிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. மேற்கொண்டு எத்தனை என்பதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

George Town Co-operative Bank

* 147 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the George Town Co-operative Bank has exceeded its maximum borrowing limit in violation of bye-law No. 18 and the rule 43 of the Tamil Nadu Co-operative Societies Rules, 1963;

(*b*) if so, the extent of such borrowing during the years from 1961–62 to 1968–69 (year-wise); and

(*c*) the action proposed to be taken against those responsible for the mismanagement?